பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 மாசி 2 ரபி-அவ் 16 இதழ் 4
யாழ்ப்பாணம் புதன்கிழமை 14-2-79

தகுதியிருந்தும் அனுமதி இன்றேல்

திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படுவர்

[கொழும்பு]

"தகுதியிருந்தும் பல்கலைக் கழகங்களில் அனுமதிபெறமுடியாத மாணவர்கள் அடுத்த ஏப்ரலில் ஆரம்பிக்கப்படும் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படுவர்."

இவ்வாறு கல்வி, உயர் கல்வியமைச்சர் டாக்டர் நிசங்கா விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்படும் மாணவர்கள் பாடசாலைகளிலுள்ள ஆய்வுகூடங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்களென்றும், அவர்களிடமிருந்து சிறு தொகைப் பணம் அறவிடப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில் மாணவிகளின்

5 மணி நேர சத்தியாக்கிரகம்!

தாம் நோயாளிகள் அல்லர் என்றும் எம்.பி.யிடம் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆங்கிலக் கன்னியர் மடம் பாடசாலையைச் சேர்ந்த சுமார் 1000 மாணவிகள், நேற்று நண்பகல் 5 மணி நேரம் உண்ணாவிரதத்துடன் மறியல் போராட்டம் நடத்தினார்கள்.

[illegible] மதில் சுவருக்கு அருகிலுள்ள நடைபாதையில், காலை 11 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை அவர்கள் அமைதியான முறையில், அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். சுமார் 90 வீதமான மாணவிகள் 5 மணி நேரம் மௌன விரதம் அனுஷ்டித்தனர்.

பாடசாலைகள் வழமைபோல் நடக்குமென வடமாகாண ஆசிரியர் சங்கமும், இலங்கைத் தமிழாசிரியர் சங்கமும் தீர்மானித்து அறிவித்திருந்தனர்

இதனால் நேற்று முன்தினம் வீடுகளுக்குச் சென்ற மாணவிகள் பத்திரிகை மூலம் இத்தீர்மானத்தைப் பார்த்துப் பாடசாலைக்கு வந்தனர்.

தடையை மீறிய மாணவிகள்

நேற்றுக் காலையில், அதிபரும், ஆசிரியைகளும் வாசலில் நின்று, வைத்திய அத்தாட்சிப்பத்திரமின்றி எவரையும் உள்ளே அனுமதிக்காட்டோமெனக் கூறினர். மாணவிகள் தடையை மீறி வகுப்புகளுக்குச் சென்று அமர்ந்துகொண்டனர்.

ஒரு மணி நேரம் சென்றும் அதிபர் சங்கம் அறிவித்திருந்தபடி பாடபோதனை நடக்கவில்லை. இதனால் மாணவிகள் வகுப்புகளைவிட்டு வெளியேறி விளையாட்டு மைதானத்தில் 11 மணி வரை காத்திருந்தனர். அதன் பின் அதிபரும், ஆசிரியர்களும் வந்து அவர்களை வெளியில் செல்லுமாறு தெரிவித்தனர்.

மாணவிகள் வெளிநடப்பு

மாணவிகள், வகுப்புக்களிலிருந்து அமைதியாகச் சென்று உச்சி வெய்யிலில், நடைபாதையில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். பக்கத்தில் தாங்கள் கொண்டு வந்த சாப்பாட்டுப் பார்சல்களையும் வைத்துக்கொண்டு 5 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்தனர். 6ம் வகுப்பிற்கு உட்பட்ட மாணவிகளும் கொதிக்கும் வெய்யிலில் அமர்ந்திருந்தனர்.

யோகேஸ்நேரில்சென்று விசாரித்தார்.

பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் வந்து "ஏன் வெளியில் இருக்கிறீர்கள்?" என்று கேட்டபோது, உயர் வகுப்பு மாணவிகள், "அதிபர் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் கொண்டுவரும்படி கேட்கிறார். நாங்கள் தரப்படுத்தலை ஆட்சேபித்துப் பகிஷ்கரிப்புச் செய்தோமேயொழிய நாம் நோயாளிகள் அல்ல" என்று தெரிவித்தனர்.

உடனே திரு. யோகேஸ்வரன் உள்ளே சென்று அதிபரைச்சந்தித்துஉரையாடினார்.

"அதிபர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லையென்றும், ஒவ்வொரு அதிபரும், ஒவ்வொரு முடிவு எடுப்பதாகவும், ஏகோபித்த முடிவெதுவும் இல்லையென்றும், அதனாலேயே தாம் கல்விப்பகுதியின் பணிப்பை ஏற்று நடப்பதாகவும் அதிபர் கூறியதாகத் தெரிகிறது.

சக ஆசிரியர்களை அழைத்து ஆலோசனை கேட்டபோது பணிப்பை ஏற்காத ஆசிரியர்கள் பலர் ஏற்கனவே வேலை நீக்கம் செய்திருப்பதை சுட்

(2-ம் பக்கம் பார்க்க)

வவனியா மாணவர்களையும் பாடசாலைகள் ஏற்கவில்லை

[வவனியா]

கடந்த முதலாந் திகதியிலிருந்து ஏழாந் திகதி வரை பாடசாலைக்கு வராமலிருந்த மாணவர்கள், 12ந் திகதி பாடசாலைக்குச் சென்றபோது வைத்திய அத்தாட்சிப் பத்திரம் இல்லாததால் பாடசாலைகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டார்கள். வவனியாவிலுள்ள மகளிர் மகாவித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாசாலை, சி. சி. ரி. எம். பாடசாலைகளுக்குச் சென்ற மாணவ, மாணவிகள் உடனடியாகப் பாடசாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

வவனியாவிலுள்ள மிகப் பெரிய பாடசாலையாகிய தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றவுடன், அவர்களுக்குப் பாடசாலை அதிபர், நிலைமையை எடுத்துரைத்து, வைத்திய அத்தாட்சிப்பத்திரம் இல்லாத மாணவர்களை வீட்டுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேற மறுத்து வகுப்புகளுக்குள் சென்று இருந்துகொண்டனர். நண்பகல் 12 மணி வரை மாணவர்கள் வகுப்புகளுக்குள் இருந்துவிட்டு மதிய போசனத்திற்காக வீடுகளுக்குச் சென்றனர் பிற்பகல் மாணவர்கள் எவரும் பாடசாலைகளுக்கு வரவில்லை.

பகிஷ்கரிப்பு நாட்களில் பாடசாலைக்கு வராத மாணவர்கள் விபரம் பாடசாலைகளிலிருந்து கல்வி அலுவலத்திற்கு அனுப்பப்மட்டுள்ளது.

[5-ம் பக்கம் பார்க்க]

"கல்லூரிகளைத் திறந்து வகுப்புக்களை நடத்துங்கள்"

அதிபர் சங்கம் மீண்டும் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாணவர்களது நலன் கருதி வடபகுதியிலுள்ள சகல பாடசாலைகளையும் திறந்துவிட வேண்டுமென்றும், வழமைபோல் பாடசாலைகளை ஒழுங்காக நடத்தவேண்டுமென்றும் வடமாகாண அதிபர்கள் சங்கம் சகல அதிபர்களையும் கோரியுள்ளது.

யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வடமாகாண அதிபர்கள் சங்க நடவடிக்கைக்குழுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு அதிபர்களைக் கோருவதெனத் தீர்மனிக்கப்பட்டது.

அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கல்வியமைச்சின் நிரந்தரச் செயலாளரிடமிருந்து வட்டாரக் கல்வியதிகாரிகள் மூலம் அதிபர்களுக்கு இன்று கிடைத்த சுற்றுநிருபத்தின்படி பாடசாலைகளை நடத்தக்கூடாது

[6-ம் பக்கம் பார்க்க]

வடபகுதி அதிபர்களுக்கு மீண்டும் அவசர உத்தரவு

[யாழ்ப்பாணம்]

பாடசாலைகளின் பகிஷ்கரிப்பு செய்த மாணவர்கள் தொடர்பாக நான்கு விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு, கல்வி அமைச்சிலிருந்து நேற்று அவசர உத்தரவு அதிபர்களுக்கு கிடைத்துள்ளதாக கல்விப்பகுதி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்த உத்தரவில் 7-ம் திகதிவரை வந்த மாணவர் விபரமும், 8-ம் திகதி வைத்திய அத்தாட்சிப் பத்திரத்துடன் வந்த மாணவர் விபரமும், வைத்திய அத்தாட்சிப் பத்திரமின்றி வந்த மாணவர் விபரமும், கேட்டு, வைத்திய அத்தாட்சி பத்திரமின்றி வரும் மாணவர்களை இடாப்பில் வரவு பதிய வேண்டாம் என்றும் கேட்கப்பட்டுள்ளதாம்.

மாணவர் நிலைமை

யாழ். இந்துக் கல்லூரியில் மாணவர்கள் குறைவாக வந்திருந்த போதிலும், வகுப்புகளில் அனுமதிக்கப்பட்டனர். கன்னியர் மடத்தில் மாணவிகள், தடைகளை மீறி காலையில் வகுப்புகளில் அமர்ந்தனர் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் மாணவிகள் குறைவாக வந்திருந்தனர். வகுப்புகள் நடக்கவில்லை, கொக்குவில் இந்துக் கல்லூரியில்,

(2-ம் பக்கம் பார்க்க)

வியாழன்வரைதொடர்ந்தால் கூட்டணிபோராடும்!

'அமிர்' அறைகூவல்

[யாழ்ப்பாணம்]

"பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் தொடர்பாக இன்றுள்ள நிலைமையே நாளை வியாழக்கிழமையும் தொடருமானால், உலகின் கவனத்தையே திருப்பும் விதத்தில் பெற்றோர்களையும் ஈடுபடுத்தி மாபெரும் போராட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி இறங்கும். அதுவே சிலவேளைகளில் தமிழ்மக்களது பூரண சுதந்திரத்துக்கான போராட்டமாகவும் அமையலாம்."

இவ்வாறு எதிர்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அரசின், தொகுதிக்கு ஐந்து வீடுகள் திட்டத்தின் கீழ் வீமன்காமத்தில் நேற்று ஐந்து வீடுகளைத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விளைவு எதுவானாலும் பாடசாலைகளில் மாணவர்களை அனுமதித்து, வகுப்புக்களை வழமைபோல் நடத்துவதெனப் பாடசாலை அதிபர்கள் எடுத்த முடிவுக்குப் பாராட்டுத் தெரிவித்த திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான இப்பிரச்னைக்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா புதன்கிழமை வரை அவகாசம் கோரியிருக்கிறார். புதன்கிழமை அவரது அமைச்சரவை சமூக

[6-ம் பக்கம் பார்க்க]

வர் விளம்பரம்

விற்பனைக்கு

தமிழ், ஆங்கில தட்டச்சுப் பொறிகளும், டுப்ளிக்கற் இயந்திரமும் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: தெல்லியூர் நடராசா (சோதிடர்), குமாரசாமி வீதி, கந்தர்மடம். 1615

EY மொறிஸ் மைனர் (MORRIS MINOR) இரண்டாவது உரிமையாளர் விலை ரூபா 18,000-00 தொடர்பு கொள்ளவும். 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1612

குத்தகைக்கு

எழுதுமட்டுவாளில் 36 ஏக்கர் தென்னந்தோட்டம் குத்தகைக்கு விடப்பட இருக்கிறது. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். என் கனகசூரியர், 44, International Budhist Centre Road, வெள்ளவத்தை. 1611

யாழ்பல்கலைக்கழக பரிபாலனசபை

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகத்தை நடத்துவதற்கு சபையொன்றினை அரசாங்கம் நியமித்துள்ளது.

பேராசிரியர் ஏ டபிள்யூ மயில்வாகனம், டாக்டர் நீலன் திருச்செல்வம், திரு ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்], திரு என் வி. ஜெயசிங்கம், திரு யோகேந்திரா துரைசாமி, திரு எஸ். ஆர் கனகநாயகம், அதிவண டி ஜே. அம்பலவாணர் ஆகியோர் இச்சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இச்சபையின் முதலாவது கூட்டம், யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 19ம் தேதி நடைபெறவிருக்கிறது. [க-அ]

நெற்பயிர் நஷ்டஈடு

[உடுபி-டி]

கடந்த வருடம் நெற்பயிர் அழிவால் பாதிக்கப்பட்ட மாவட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடாக 7,40178ரூபாவை பயிர்க் காப்புறுதிச்சபை வழங்கியுள்ளது

1978 ம் ஆண்டு பெரும் போகத்தில் இம்மாவட்ட விவசாயிகள் தாம் பயிரிட்ட 28,525 ஏக்கர் நெல்வயல்களைப் பயிர்க் காப்புறுதி செய்துள்ளதால் பயிர்க் காப்புறுதிக் கட்டணமாக 8,55,754 ரூபா பயிர்க் காப்புறுதி சபைக்குக் கிடைத்துள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டது [உ]

அறிவித்தல்

வண் ணார்பண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம் (சிவன்கோவில்) யாழ்ப்பாணம் சொந்தமான கொடுக்கல் வாங்கல் குத்தகை உறுதிகள் ஒப்பந்தங்கள் எனது கையொப்பம் இன்றி ஆக்கப்பட்டவை செல்லுபடியற்றவை என்பதை அறியத்தருகிறேன்.

- வை. கந்தப்பச்செட்டியார்

1619

யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தின் யாழ் கண்டி வீதியில் இருக்கும் கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டிடத்திற்கு வெள்ளையடித்தல், டெயின்ரிங் வேலைகள் செய்வதற்கு பின் குறித்த விதத்தில் கூறுவிலை கோரப்படுகின்றது.

வேலைக்குத் தேவையான பொருட்களின் தொகையும், செய்வதற்குரிய கூலியும் — மேலதிக விபரங்கள் தேவைப்படின் சங்கக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கேள்வி விண்ணப்பத்தபாலின் இடது பக்க மேல் மூலையில் கேள்விக்கான பெயர் குறிப்பிட்டு 20-2-'79க்குப் பிந்தாமல் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம். 1617

தேவை

மின்தூள் உற்பத்தியாலையை நிர்வகித்து நடத்துவதற்கு ஆற்றலுடைய ஒருவர் கீழ் வரும் பதவிக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது

பதவி:- உற்பத்தி முகாமையாளர் தரம் - 1

கல்வித்தகைமைகள்:- 1. அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் பட்டம் பெற்ற விஞ்ஞானப் பட்டதாரி அல்லது

2. இறுதித் தேர்வு விஞ்ஞானப் பட்டப்பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்

வயது: 25க்கும் 35க்கும் இடையில் இருக்கவேண்டும்

சம்பளம்: ரூபா 5000 — 825
20/10, 5/5

(எல்லாப் படிகளும் சேர்க்கப்பட்ட மாதாந்த முழுச்சம்பளம் ரூபா 640/-) கூடிய தகைமைகளுடன் அனுபவம் உள்ளவருக்கு மாதாந்தச் சம்பளம் மேற்படி சம்பளத் திட்டத்தில் பொருத்தமான ஒருமுனையில் ஆரம்பிக்கப்படும். சரியான நபருக்கு சிறந்த முன்னேற்ற வாய்ப்பு உண்டு.

நற்சாட்சிப் பத்திரங்கள்: சமீப காலத்தில் பெறப்பட்ட 2 நற்சாட்சிப் பத்திரங்களுள் ஒன்று அப்பகுதி உதவி அரசாங்க அதிபரிடம் பெறப்பட்டதாய் இருக்க வேண்டும்.

பிணை:- காசுப்பிணை ரூபா 2000/-
ஆதனப்பிணை:- ரூபா 10,000/-
விண்ணப்ப முடிவு திகதி:- 28-02-79

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

தலைவர்,
வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
25, முன் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விண்ணப்பங்கள் அனுப்பும்போது தபால் மேல் உறையில் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். 1614

உலகில் எப்பகுதிக்காவது பிரயாணம் செய்ய

விரும்புகிறீர்களா ?

வெளிநாடுகளில் தொழில்பெறச்செல்ல விசா, பாஸ்போட் (கடவைச்சீட்டு) சிரமமின்றி உடனுக்குடன் தேவையா? மலிவான விமானப் பிரயாணச் சீட்டுக்கள் தேவையா? வெளிநாடுகளில் இருந்து மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்ய விரும்புபவர்களுக்குச் சிரமமின்றி இறக்குமதி ஒழுங்குகளுடன் நிதி ஒழுங்குகள் தேவையானவர்களும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய விரும்புபவர்களும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

★ லங்மென் என்ரபிறைசஸ் ★

275 1/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

லங்மென் என்ரபிறைசஸ்

20, ரெம்பிள் வீதி, கொழும்பு - 10.

1616

மாணவர், ஆசிரியர் பிரச்னை:

நாடெங்கும் எதிர்ப்பியக்கம் இ. ஆ. சங்கம் நடத்தும்

[வவுனியா]

மாணவர்கள் பிரச்னை ஆசிரியர்கள் பிரச்னை, பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் என்பவற்றை முன்வைத்து இலங்கை ஆசிரியர் சங்கம், நாடு பூராவும் பரந்தளவிலான எதிர்ப்பியக்கத்தை நடத்த இருக்கின்றது.

பாடசாலைப் புத்தகவிலை அதிகரிப்பு, சகல பாடசாலைகளுக்கும் சமமான கல்வி வசதிகள் வழங்கப்படாமை ஆசிரிய இடமாற்றச் சபை அமைக்கப்படாமை அரசியற் பழிவாங்கல் ஆகியவற்றை எதிர்த்தே இவ்வியக்கம் நடத்தப்படவிருக்கின்றது. இவ் எதிர்ப்பியக்கத்தின் ஓரம்சமாக நாடு பூராவும் சுவரொட்டி இயக்கமும் நடத்தப்படும்.

வவுனியா மாவட்டத்தில் இவ்எதிர்ப்பியக்கம் அடுத்த மாதம் 24ம், 25ம் திகதிகளிலும் கொழும்பில் மார்ச் மாதம் 30ம் திகதியும் நடத்தப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எச். என். பெர்னாண்டோ நமது நிருபரிடம் தெரிவித்தார். [அ]

வடபகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் வருகை மிகக் குறைவு, வகுப்புகள் நடக்கவில்லை. யாழ். மத்திய கல்லூரிக்கு வந்த மாணவர்கள் வகுப்பில் அனுமதிக்கப்பட்டனர். இதே போன்று, சென். பற்றிக்ஸ், சென். ஜோன்ஸ் கல்லூரிகளிலும், வந்த மாணவர்களை வகுப்பில் அனுமதிக்கப்பட்டனர். ஸ்ரான்லி கல்லூரியில் மாணவர் குறைவாக வந்து திரும்பி சென்றுவிட்டனர் வண்ணை வைத்தீஸ்வராவில், மாணவர் குறைவாக வந்திருந்தனர். வகுப்புகளில் அனுமதிக்கப்பட்டனர் வேம்படி மகளிர் கல்லூரியில் மாணவிகள் வழக்கத்திலும் குறைவாக வந்திருந்தனர், வகுப்புகளில் அனுமதிக்கப்பட்டனர்.

மானிப்பாய், நல்லூர்...

மானிப்பாய், கல்வியங்காடு, நல்லூர் பகுதிகளிலும் வரணி மகாவித்தியாலம். சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகிய வற்றிலும் மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனராம்.

கிளிநொச்சி பகுதியில்

கிளிநொச்சி பகுதியில் மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனராம். உயர் வகுப்பு மாணவர்கள் கிளிநொச்சி எம் பி யின் காரியாலயத்தில் எம் பி. யிடம் நிலைமையை எடுத்துக் கூறச்சென்று எம் பி இல்லாததினால் திரும்பிச் சென்றனர்.

வடமராட்சியிலும் மாணவர்கள் சில பாடசாலைகளில், குறைவாகவே வந்திருந்தனர். சிலவற்றில் திருப்பி அனுப்பப்பட்டனர்.

'வியாழன் காலை பத்திரிகையில் முடிவுவரும் அதன்படி செய்யுங்கள்' என சிலர் ஆலோசனை கூறினார்களாம்.

நஞ்சருந்தி தப்பியவர் ஆஸ்பத்திரியிலிருந்து தலைமறைவு

[பண்டத்தரிப்பு]

கிருமிநாசினி அருந்திய ஆபத்தான நிலையில் யாழ் அரசினர் வைத்தியசாலை 14-ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட 34 வயது நபர் ஒருவர் தலைமறைவாகி விட்டாராம்.

சுன்னாகத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் என்னும் நபர் கிருமிநாசினி குடித்ததாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தாராம் ஓரளவு குணமானதும் கடந்த ஞாயிறுக்கிழமை நண்பகல் ஒருமணி தொடக்கம் இவர் வார்ட்டிலிருந்து காணாமல் போய் விட்டார் என்றும் அவர் போகும் போது ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான உடுத்திருந்த 'செக் குளோத்' என்னும் உடுப்புடன் மறைந்து விட்டார் என்றும் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். [அ]

3 மாணவர் மட்டுமே...

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திற்கு நேற்று 3 மாணவர் மட்டுமே வந்து திரும்பிச்சென்றனர்.

எவருமே வரவில்லை

கொடிகாமம் அரசினர் பாடசாலைக்கு மாணவர் எவரும் வரவில்லை. பெற்றோர்கள் மட்டும் சென்று அதிபரிடம் நிலைமையை அறிந்து சென்றனர். மிருசுவில் மீசாலை பகுதியிலும் பாடசாலை நடைபெறவில்லை. பூநகரிபகுதியிலும் மாணவர்கள் குறைவாகவே வந்திருந்தனர். [கொ-இ]

யாழ். நகரில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டிக்காட்டினார்கள் என்றும் அதிபர் தெரிவித்தாராம்.

இதனைத் தொடர்ந்து அதிபரும் யாழ். எம்.பி யும் வெளியில் வந்து மாணவிகளைச் சந்தித்தனர்.

'ஈழநாடு' செய்[illegible] பிரகாரம்

பாடசாலை இன்று வழமைபோல் நடக்கும் என வடமாகாண அதிபர் சங்கமும் இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கமும் 'ஈழநாடு' பத்திரிகை மூலம் அறிவித்திருந்ததாகவும் அதனால் தாங்கள் பாடசாலை வந்ததாகவும் மாணவிகள் கூறினார்.

பாடத்திட்டம் பாடசாலையில் பூர்த்திசெய்ய முடியாததினால் நாங்கள் அதிகாலையிலும் இரவும் வீட்டில் படிப்பதுடன் தனியார்கல்வி நிலையங்களிலும் போதனை பெற்று கஷ்டப்பட்டு படித்துவருவதாகவும் இந்நிலையில் தமக்கு பகிகலைக்கழக அனுமதி இன்றேல் தாம் என்னசெய்வது என்றும் மாணவிகள் எம். பி. யிடம் கூறினார்களாம்.

எப்படி சித்தி பெறுவது?

பாடசாலை வந்த தங்களுக்கு ஆசிரியர்கள் போதிக்காவிடில், எப்படி பாடத் திட்டத்தை பூர்த்தி செய்ய முடியுமென்றும் எப்படி பரிட்சையில் சித்தியடைய முடியுமென்றும் ஒருமாணவி கேட்டார். 5-ம் வகுப்பு புலமைப் பரிட்சையைப் நாம் எதிர்நோக்கியிருப்பதாகவும் மற்றொரு மாணவி கூறினார்.

நாளையும் சத்தியாக்கிரகம் இருப்போம்

நாளையும், வகுப்புகளில் போதனை நடத்தாவிடில் உண்ணாவிரதமும், சத்தியாக்கிரகமும் செய்வோம், என்றும் மாணவிகள் தெரிவித்தனர்.

இவ்விடயமாக, நமது தலைவர்கள், அரசுடன் கதைத்து கொண்டிருப்பதாகவும் விரைவில் முடிவு தெரியுமென்றும் எம். பி தெரிவித்து அவர்களை அமைதியாக செல்லுமாறு கூறினார்

4 மணியுடன், மாணவிகள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு வீடு சென்றனர். [கொ-இ]

"எப்பொழுதும்எக்கட்சியினதும்

கட்டுப்பாட்டுக்குட்படாத தனித்துவ அமைப்பு'

தமிழ் இளைஞர் பேரவை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"தமிழ் இளைஞர் பேரவை எந்தவொரு அரசியற்கட்சியினதும் கட்டுப்பாட்டுக்குட்படாத தனித்துவமான அமைப்பாகவே ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை செயற்பட்டு வருகிறது."

இவ்வாறு தமிழ்இளைஞர் பேரவை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்வறிக்கை விவரம் வருமாறு:

1971ம் ஆண்டு சிறிலங்கா ஆட்சியினால் புகுத்தப்பட்ட பல்கலைக்கழக தரப்படுத்துதலுக்கு எதிராக தமிழ்மாணவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். இம்மாணவர்களை சத்தியசீலன், அரியரத்தினம், சிவகுமார் போன்றவர்கள் நெறிப்படுத்தி தமிழ் மாணவர் பேரவை என்றதோர் அமைப்பை உருவாக்கினர். இவர்களால் நடத்தப்பட்ட தரப்படுத்தலுக்கெதிரான பகிஷ்கரிப்பு ஊர்வலம் போன்ற நிகழ்ச்சிகள் மக்களிடையே ஓர் எழுச்சியை ஏற்படுத்தியது. மாணவர் போராட்டங்களில் முன்னின்ற இளைஞர்கள் அரசின் கெடுபிடிகளால் தமிழ் [illegible]ர் பேரவையை ஸ்தாபிதியாக தொடர்ந்தும் [illegible]டியெழுப்ப முடியவில்லை.

சேனாதிராசா

இந்நிலையில் இளைஞர்களிடையே அபிமானத்தைப்பெற்றிருந்த திரு. சேனாதிராசா மாணவர்களையும் இளைஞர்களையும் உள்ளடக்கியதோர் அமைப்பை உருவாக்க வேண்டி அயராத முயற்சிகளை எடுத்து வந்தார். இவர் இடையிடையே சிறை சென்றபோதும் இவரது தம்பிகள் இயக்கத்தைத் தமது சக்திக்கேற்ப நடத்தி தமிழ்இளைஞர் பேரவை என்றதோர் விடுதலை இயக்கத்தை உருவாக்கியுள்ளார்கள்.

தனித்துவ அமைப்பு

தமிழ் இளைஞர் பேரவை எந்தவொரு அரசியற் கட்சியினதும் கட்டுப்பாட்டுக்குட்படாத தனித்துவமான அமைப்பாகவே ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை செயல்பட்டு வருகிறது. தமிழீழ விடுதலையின் தலைமை அமைப்பான தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு நிபந்தனையற்ற ஆதரவை தமிழ் இளைஞர்பேரவை வழங்கிவந்துள்ளது. இந்த அடிப்படையிலேயே தமிழ் இளைஞர் பேரவை தமது பூரண சக்தியைப் பிரயோகித்து தமிழீழத்துக்கான மக்கள் ஆணையைப் பெற்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பாராளுமன்றம் சென்றனர். தமிழ்மக்கள் குறிப்பாக இளைஞர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி விடுதலைக்கான தனது பயணத்தை ஆரம்பிக்குமெனத் திடமாக நம்பினர். த. வி. கூ. பாராளுமன்ற உறுப்பினர்கள் த. வி. கூ.வின் சகல அமைப்புகளையும் தமது ஆதிக்கத்துள் இழுத்துள்ளனர். இந்நிலையிலேயே த. வி. கூ செயற்குழு இளைஞர்களிடையே மோதலை ஏற்படுத்தும் வகையில் தீர்மானத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை த. வி. கூ. தலைமையிடம் கொடுத்துள்ளது.

தமிழீளக் கோரிக்கை

தமிழீளத்தின் பொருளாதாரத்தில் குறுகிய காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியே தமிழீளம் என்ற கோரிக்கையை எவருமே நிராகரிக்க முடியாத நிலையை உருவாக்கியது. இதை நன்குணர்ந்த அரசு தமிழீளத்தின் பொருளாதாரத்தை(விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்கள்) அழித்து வருகிறது. தமிழீள விடுதலைக்கான திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் போன்று, வேலைவங்கிப் படிவங்கள், உத்தியோகங்கள் இடமாற்றங்கள், சமாதான நீதவான், கூட்டுறவு இயக்குநர் நியமனம் ஆகிய விடுதலைக்கு மாறான வேலைகளில் ஈடுபட்டு தமிழிளத்தின் ஒற்றுமையைச் சீர்குலைத்து விடுதலையில் ஒரு பின்னடைவை ஏற்படுத்தி வருகின்றனர்.

நிபந்தனையற்ற ஆதரவு

இந்நிலையில் தமிழ்இளைஞர் பேரவை நிபந்தனையற்ற ஆதரவை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்குவதன்மூலம் இளைஞர் பேரவையின் அமைப்பு விதியில் கூறப்பட்டுள்ள நோக்கத்துக்கு மாறாகவே செயல்பட வேண்டிய சூழ்நிலை இளைஞர் பேரவைக்கு உருவாகின்றது. இதனாலேயே விடுதலைக்கான வேலைகளில் மட்டுமே த. வி. கூட்டணிக்கு இளைஞர் பேரவை ஆதரவு வழங்குவதென தீர்மானித்துள்ளது.

கடும்முயற்சி

பாராளுமன்ற இயக்கத்தை இளைஞர் பேரவையின் இன்றைய நடவடிக்கைகள் பலவீனப்படுத்தும் என்று கருதுகின்ற த. வி. கூ. பாராளுமன்ற உறுப்பினர்கள் இளைஞர் பேரவையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர கடும் முயற்சி எடுத்துவருகின்றனர். தமிழர் விடுதலைக்கூட்டணி தனக்கென்றோர் அமைப்பு விதியை உருவாக்கமுன்னரே தனக்கென்று சொந்தமானதோர் அமைப்பு விதியுடன் செயல்படும் தமிழ் இளைஞர் பேரவையை தேர்தல் நோக்கத்துக்காக சிதைக்க முனைவது வேதனைக்குரியதே.

மோதல் உண்டாக்க...

தமிழர் விடுதலைக் கூட்டணி இளைஞர் பேரவையிலிருந்து கடந்த காலங்களில் வெளியேறியவர்களையும், வெளியேற்றப்பட்டவர்களையும், அற்ப சொற்ப சலுகைகளுக்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அண்டிப்பிழைப்பவர்களையும் வைத்து ஓர் இளைஞர் அமைப்பை உருவாக்கி இளைஞர்களிடையே மோதலை ஏற்படுத்தி விடுதலைப் பயணத்தைக் காலந்தாழ்த்த முயல்வார்களாயின் இது இவர்கள் யார் என்பதை மக்களுக்கு அம்பலப் படுத்தும் செயலாக அமையும்.

தமிழ் இளைஞர் பேரவை அமைப்பு ரீதியாக அரசியற் கட்சிகளில் அங்கம் வகிக்கக் கூடாது என்ற முடிவெடுக்க முன்னரே பேரவை உறுப்பினர்கள் தனித்துவமாக இயங்க வேண்டும் என்ற காரணத்துக்காகவே திரு. சேனாதிராசா தமிழர் விடுதலைக்கூட்டணி அங்கத்துவத்தை பெறாது முன்மாதிரியாக விளங்கினார். அவர் காட்டிய வழியில் செயல்படும் நாம் தந்தை செல்வாகட்டி வளர்த்த ஒற்றுமை சிதைவதை ஒருபோதும் விரும்ப முடியாது ஒற்றுமை என்பது பாராளுமன்ற பதவிகளை பகிர்வதிலோ, பாராளுமன்ற நாற்காலிகளைக் காப்பாற்றுவதிலோ தங்கியிருக்கக்கூடாது. விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதிலேயே ஒற்றுமை தேவைப்படுகிறது. அதையே தந்தை செல்வாவும்விரும்பினார். அதுவே தமிழ் இளைஞர் பேரவையின் நோக்கமுமாகும்."

யாழ். மாவட்டத்தில் நெற்செய்கை ஏற்பாடு

[உடுப்பிட்டி]

இவ்வருடம் யாழ். மாவட்டத்தில் உள்ள 17 கமநலசேவைநிலையங்களின் பிரிவுகளிலும்பெரும் போகத்தில் 93326 ஏக்கரிலும், சிறுபோகத்தில் 11,607ஏக்கரிலும் நெல்பயிரிடத்திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்போகத்தில் 2,637 510 புசலும், சிறுபோகத்தில் 534,605 புசலும் நெல் உற்பத்தி செய்யப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய திருந்திய இனவிதை நெல் 580 புசலும், பழைய திருந்திய இன விதை நெல் 630 புசலும் இம்மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு நெற் செய்கைக்குத் தேவையான உரவகைகளும் ஒதுக்கீடு செயயப்பட்டுள்ளன.

3300 தொன் வீ-1 உரமும், 1650 தொன் ரீ. டீ. எம். உரமும், 3900 தொன் யூரியா உரமும் விவசாயிகளுக்குத் தட்டுப்படின்றிக் கிடைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ]

யாழ். மாவட்டத்தில்

காடுகள், மரங்கள் அழிக்க அரசாங்க அதிபர் தடை

[உடுப்பிட்டி]

யாழ். மாவட்டத்தில் காடுகளையும் மரங்களையும் அழிப்பதற்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ தடை விதித்துள்ளார்.

அரசாங்கத்தின் மரம் நடுகைத் திட்டத்தைத் தொடர்ந்தே இங்குள்ள காடுகளையும், மரங்களையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இதற்கு முன்னோடியாக யாழ். மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள காட்டு மரங்களை வெட்டி அழிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

காடு வளர்க்கும் திட்டத்தை ஊக்குவிக்கும் முகமாகப் பொதுமக்களுக்கு வன பரிபாலனத் திணைக்களம் மரக்கன்றுகளை விநியோகம் செய்து வருகின்றது. [உ]

மக்கள் கருத்து

யாழ். பல்கலைக்கழகத்திற்கு பஸ் சேவை

சென்ற ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்கு, முன்னைய ஆண்டுகளைவிடக் கூடுதலாகவும் அதேநேரம் மற்றைய பல்கலைக்கழகங்களைவிட அதிகமாகவும் மாணவகளை அனுமதிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே' இம்மாணவர்களில் எந்த ஒரு மாணவனுக்கும் விடுதிவசதி அளிக்கப்படவில்லை அதுமட்டுமல்ல முன்னைய ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் விடுதிவசதியளிக்கப்படவில்லை. இதனால் பெரும்பாலான மாணவர்கள் தங்கள் தங்கள் வீடுகளிலிருந்தே பல்கலைக்கழகத்திற்கு வந்துசெல்கின்றனர். வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் பலரும் யாழ்ப்பாண நகர்ப்புறங்களிலுள்ள வாடகை அறைகளில் தங்கி வருகிறார்கள். இதனால் பெரும்பாலான மாணவர்கள் யாழ்ப்பாணத்திற்கும், யாழ். பஸ்நிலையம் வந்து வேறுவேறு பகுதிகளுக்கும் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து யாழ். பஸ்நிலையம் வருவதற்கு மாணவர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர். ஏனெனில் 764 பாதை இலக்கம்கொண்ட பஸ்கள், மற்றைய பிரயாணிகளுக்கே பற்றாக்குறையாக இருக்கின்ற அதேவேளையில் பல்கலைக்கழக மாணவர்களும் அதிலைதான் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றனர். பலாலிவீதியில் யாழ்ப்பாணம் நோக்கி வரும் பஸ்கள் பல்கலைக் கழகச்சந்தியில் நிறுத்தப்படுவதில்லை. காரணம் அதில் ஏற்கனவே பிரயாணிகள் நிறைந்திருத்தல் ஆகும். இதனால் மாணவர்கள் பலமணி நேரம் பஸ்தரிப்பிடத்தில் காத்திருக்க வேண்டியவர்களாகிறார்கள். இதனால் மாணவர்களின் கல்வி நேரம் வீணாகிறது.

இதே நேரம் இலங்கையின் மற்றைய பல்கலைக்கழகங்களுக்கு அந்தந்தப் பிராந்தியப் போக்குவரத்துச்சபையினர் சிறந்த சேவையை அளித்து வருகின்றனர். உதாரணமாக கண்டி நகரிலிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கும், தும்பறை வளாகத்திற்கும் பதினைந்து நிமிடங்களுக்கொருதடவை பஸ்சேவை நடாத்தப்படுகின்றது. இதே போன்ற சேவையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்க வடபிராந்தியபோக்குவரத்துச்சபையிடம் போதிய எவு பஸ்கள் இல்லாவிட்டாலும் மணித்தியாலயத்திற்கு ஒருதடவையாயினும் பஸ் சேவை நடத்தினால் மாணவர் பெரிதும் பயனடைவார்கள். யாழ், பல்கலைக்கழக மாணவர்களின் நலனைக்கருதி இனிமேலாயினும் இவ்வாறான சேவையொன்றை ஆரம்பிக்கும்படி வடபிராந்திய போக்குவரத்துச் சேவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

க. அருந்தவபாலன்.
யாழ் பல்கலைக்கழகம்.

0 0 0

எம். பி.க்களுக்கு ஒதுக்கப்பட்ட விசேஷ ரயில் பெட்டி

இரவு செல்லும் மெயில் வண்டியில் 6 விசேஷ பெட்டிகள் நிறுபாட்டப்பட்டதைத் தொடர்ந்து வடபகுதி எம். பிக்களுக்கென்று பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் எண்ணக் கோச்சியில் விசேட பெட்டி ஒன்று தொடுக்கப்பட்டது. அவ்வண்டி எம். பி மார் ஏறும் பிரதான புகையிரத நிலையங்களில் மட்டும் நின்று செல்லும் என அறிவித்தல் கொடுக்கப்பட்டது. அவ்வறிவித்தலின் பேரில் வடபகுதியில் இருந்து பல பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்றனர்.

இவர்களுக்கென்று விசேஷமாக ஒதுக்கப்பட்ட பெட்டியில் அதிவிசேஷங்கள் பல காணப்பட்டன. அப்பெட்டியில் பூட்டப்பட்ட விளக்குகள் தாங்கள் இருப்பதையே காட்டிக்கொள்ளவில்லை. அத்துடன் அந்தப் பெட்டியில் தண்ணீரும் இன்றிப் பெரிதும் கஷ்டப்பட்டனர். எம். பிக்கள் ரயில் நிற்கும் நிலையத்தில் மெழுகு திரியும் நெருப்புப் பெட்டியும் வாங்கி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனராம்.

எஸ். கே. குமாரசாமி,
கண்டிவீதி,
கிளிநொச்சி.

இன்று

(கொக்குவில்)

வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை மாலை யாழ் தாதிமார் பயிற்சிக் கல்லூரி விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

தலைவரின் வருடாந்த அறிக்கையும், பொருளாளரி அறிக்கையும் வாசிக்கப்படும். புதிய நிர்வாகிகள் தெரிவும் வடபகுதி புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான சபைக்கு அங்கத்தவர்கள் 4 பேர்தெரிவும் நடைபெறும்.

வேலைநிறுத்தம் செய்ய முடிவு

(உடுப்பிட்டி)

அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் ஏழு ஊழியர்களை நிர்வாகம் வேலை நீக்கம் செய்துள்ளதற்கு ஆட்சேபம் தெரிவித்தும். வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும். இக் கோரிக்கைகள் வென்றெடுக்கப் படும் வரை வேலைநிறுத்தம் மேற்கொள்வதென்றும் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் உடுப்பிட்டிக் கிளை முடிவு செய்துள்ளது.

பிரஸ்தாப ஏழு ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள வேலை நீக்கக் கடிதங்களை வாபஸ்பெற்று மீண்டும் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்றும் இத் தொழிற்சங்க உடுப்பிட்டிக் கிளை உடுப்பிட்டிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரிடம் கோரியுள்ளது.

வேலைநிறுத்தம் மேற்கொள்ளும் இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைக்கு ஊழியர் பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடாத்தப்பட்டுப் பல மாதங்களாகி விட்ட போதிலும், இன்றுவரை ஊழியர் பிரதிநிதி நியமனத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படாமலுள்ளது. அங்கீகாரம் வழங்கப்படாது விடின் உடன் புதிய தேர்தலை நடாத்த வேண்டும். இது மேற்படி கோரிக்கையில் ஒன்றாகும். [உ]

ஈரானிய தற்காலிக அரசு:

ரஷ்யா அங்கீகாரம்; ஆதரிக்க அமெரிக்காவும் விருப்பம்

தெஹ்ரான், பெப். 13

சமயத் தலைவர் அயத்துல்லா கொமெய்னியால் பஸாகனை பிரதமராகக் கொண்டு ஈரானில் அமைக்கப்பட்டுள்ள ஆட்சியை ரஷ்யா அங்கீகரித்துள்ள அதேவேளையில் இவ்வரசாங்கத்துக்கு ஆதரவளிக்க அமெரிக்காவும் விருப்பம் தெரிவித்துள்ளது.

சேர்ந்து செயற்படத் தயார்

'ஈரானுடன் சேர்ந்துசெயற்படத் தயார்' என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஸ்திரநிலை

ஈரானில் பிரிவினை உணர்வு நீங்கி இனியாவது ஸ்திரநிலை உருவாகவேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. [உ]

பக்தியார் இறக்கவில்லை: எங்கோ ஒளிந்திருக்கிறார்?

தெஹ்ரான், பெப். 13

ஈரானின் முன்னாள் பிரதம மந்திரி டாக்டர் பக்தியார் எங்கோ ஓரிடத்தில ஒளிந்திருக்கிறார் என்று தெஹ்ரான் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் ஆட்சி கவிழ்க்கப்பட்டதனையடுத்து தற்கொலை செய்துகொண்டதாக முன்னர் வந்த செய்திகள் தெரிவித்தன.

மன்னர் மாளிகை

இதேவேளை மன்னர்ஷாவின் மாளிகை கொமெய்னி ஆதரவாளர்களால் கைப்பற்றப்பட்டுவிட்டது.

மாளிகைக்கு பொறுப்பான வர்கள் சரணடைந்துவிட்டனர். [உ]

500 பேர் பலி; 2000 பேர் காயம்

தெஹ்ரான், பெப். 13

தெஹ்ரானில்சமயத்தலைவர் அயத்துல்லா கொமெய்னியின் ஆதரவாளர்களுக்கும் டாக்டர் பக்தியாரின் ஆதரவாளர்களுக்குமிடையே கடந்த 48 மணித்தியாலங்களில் நடைபெற்ற சண்டைகளில் 500 பேர் உயிரிழந்தனர்; 2000 பேர் காயமடைந்தனர். [உ]

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

59 பயணிகள் பலி!

லண்டன், பெப். 13

சென்ற ருஷிய விமானம் 59 பிரயாணிகளுடன் ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டது.

விமானம் நிலத்தில் வீழ்ந்து நொறுங்கியதால் அதிலிருந்த பிரயாணிகள் அனைவரும் உயிரிழந்தனர்.

ஸாலிஸ்பரியில் வைத்து கறுப்பு இன கொரிலாக்களே இவ் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது. (உ)

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு:

பூட்டோ வழக்கறிஞர்கள் மீளாய்வு செய்யக் கோருவர்

லாகூர், பெப். 13

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவின் வழக்கறிஞர்கள் சுப்ரீம்கோர்ட் தீர்ப்பை மீளாய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்ளவிருக்கின்றனர்.

மரணதண்டனை தீர்ப்பை ஆட்சேபித்து பூட்டோசெய்த அப்பீலை சுப்ரீம்கோர்ட் நிராகரித்துத் தீர்ப்பளித்தது தெரிந்ததே. [உ]

கொள்ளைலாப

வியாபாரிகளுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியதான குற்றச்சாட்டின் பேரில் தொடரப்பட்ட வழக்குகளில் பல வர்த்தகருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. கிளிநொச்சி நீதிமன்றத்தில் பரந்தனைச் சேர்ந்த என். பூபாலசிங்கம் என்பவர் கொண்டைக் கடலையின் விலை ஒரு இருத்தல் 3 ரூபா 20 சதமாக இருக்க 3-40 சதமாக விற்றதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இ. நடராசா என்பவர் மீன்றின்னில் பத்துச்சதம் கூடுதல் லாபம் வைத்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் யாழ். நீதவான் திரு திசநாயகா 400 ரூபா அபராதம் விதித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். தில்லைநாதன் என்பவர் மைசூர் பருப்பில் கூடுதல் லாபம் பெற்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. லக்ஸ்பிறேயை விற்க மறுத்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம். ஸ்ரீஸ்கந்தராசா என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கில் 100 ரூபா அபராதமும். இதே குற்றச்சாட்டின் பேரில் நல்லூரைச் சேர்ந்த எப். ஜையராஜா என்பவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் இதே அபராதமும் விதிக்கப்பட்டன. கொண்டைக்கடலையில்20சதம் கூடுதலாகப் பெற்ற மானிப்பாயைச் சேர்ந்த எஸ். சிவராஜா என்பவருக்கு 400 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதிப் பொறுபபதிகாரி திரு. என் சண்முகம் இத் திடீர் வேட்டைகளை நடத்தியிருந்தார். [உ]

திருட்டு முயற்சி தோல்வி; ஹொரணைவாலிபர் கைது

கரவெட்டியில் சம்பவம்

[நெல்லியடி]

நள்ளிரவு வேளையில் வீடொன்றில் திருட முயன்ற நபரொருவர் வீட்டுக்காரரின் சாமர்த்தியத்தினாலும், ஊரிலுள்ள இளைஞர்களின் முயற்சியாலும் பிடிபட்டார்.

கரவெட்டி வடக்கு சுகாதாரப் பரிசோதகர் திரு. கே. பொன்னம்பலம் என்பவரின் இல்லத்திலேயே திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது

பிரஸ்தாப வாலிபர் கரவெட்டி வடக்கு கிராமசேவையாளர் திரு எம் மாணிக்கவாசகரிடம் ஒப்படைக்கப்பட்டார். பின்பு கிராமசேவையாளர் அத்திருடனை பருத்தித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்தார்

இத்திருட்டு நபர் வேறு இருவருடன் இவ்வீட்டில் திருட்டு முயற்சியில் இறங்கியதாகவும், மற்றைய இரு வாலிபர்களும் தப்பியோடிவிட்டதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது

இத்திருட்டு முயற்சியில் ஈடுபட்ட நபர் வடமத்திய மாகாணத்திலுள்ள ஹொரணையைச்

(5-ம் பக்கம் பார்க்க)

இன்றைய பலன்

மாசி மாதம் 2ம் திகதி

(14-2-1979)

புதன்கிழமை

மேடம்: இன்று சுவைதரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். பிதாவழித் தனமும் சேரும். காதலர்கள் எண்ணங்கள் கைகூடும். வரவிலும் திருப்தி ஏற்படும்.

இடபம்: அறவழியை நாடுவீர்கள். வெளியிடத்தொடர்புகளில் முன்னேற்றம் காணப்படும். இடப்பிரிவுக்கும் இடமேற்படலாம். சுபதினம்.

மிதுனம்: சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும். கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு, பெரியோர் ஆதரவும் பெருகும். மகிழ்ச்சியான தினம்.

கடகம்: எதிர்பாராத விளைவுகளால் பாதிக்கப்படுவீர்கள், சிலர் வாழ்க்கையில் நஷ்டம் ஏற்படும். கடமையில் தடைகள் ஏற்படும். மது பானத்தை தவிர்க்கவும்.

சிங்கம்: புனைந்துரைகளால் மனது புண்படும். அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கும். சகாக்களின் விரோதத்தைச் சம்பாதிக்கநேரிடும். வேண்டுவது பொறுமையே.

கன்னி: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. தெய்வத்தின் அருளும் உண்டு.

துலாம்: ஆசாரக்குறைவான சம்பவங்கள் இடம்பெறும். உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்தவும், பூமிப பிணக்குகளைத் தவிர்த்துக் கொள்ளவு .

விருச்சிகம்: குடும்பத்தில் திருப்திகரமான சூழ்நிலை தென்படும். கல்வித்துறையில் ஆர்வம் பிறக்கும், தாய்வழி ஆதரவும் கிடைக்கும்.

தனுசு: அறவழிகளை மனம் நாடும, கவர்ச்சிகரமான பொருட்களை விரும்புவீர்கள், வேற்றுமைகள் மறையும். உங்கள் உதவிக்கு புத்திரர் விரைவர், முயற்சி முன்னேற்றம் தரும்,

மகரம்: பொருள் கைவிட்டுப் போவதற்கு இடமுண்டு. வாகனச் [சாரதிகள் கவ[illegible] செலுத்தவும், எதிரிகள் [illegible]குவர். எதிலும் முன்யோ[illegible] விரும்பத்தக்கது.

கும்பம்: களஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கும். பசுமையான நினைவுகள் நெஞ்சில் அலைமோதும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு. பொதுவாக நல்லதினம்.

மீனம்: பணமுடையினால் பெரிதும் வேதனைப்படுவீர்கள் கடன்தொல்லைகளும் அதிகரிக்கும், நம்பியிருந்த இடத்திலிருந்து ஏமாற்றமான செய்திகிடைக்கும். மனத்தளர்ச்சிக்கு இடங்கொடாது நடக்கவும்,

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

ம. கி. பிரதானை:

எகிப்து, இஸ்ரேல் மீண்டும் சமரஸ முயற்சி

வாஷிங்டன், பெப். 13

எகிப்தும் இஸ்ரேலும்காம்ப் டேவிட்டில் மத்தியகிழக்கு சமரசப்பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க விருக்கின்றன.

இம் மாதம் 21ந் திகதி இப் பேச்சுவார்த்தைகள் அமெரிக்க ஆதரவுடன் நடைபெறும்.

இப்பேச்சுவார்த்தைகள் தேவிகாணும் பட்சத்தில் இரு தலைவர்களும்கொண்ட புதிய உச்சிமாநாட்டைக் கூட்டத் தாம் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் தெரிவித்துள்ளார். [உ]

அமைச்சர் திறந்துவைத்தார்

[கொச்சுவில்]

யாழ். முற்றவெளி மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ் நிலையத்தை போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச் முகம்மது நேற்று முற்பகல் திறந்துவைத்தார்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பொன்னுன்டோ யாழ் விசேட ஆணையாளர் திரு கே. சிவஞானம் இபோ. ச வடபிராந்திய அத்தியட்சகர் திரு. அமரசிங்கம், வடபிராந்திய கட்டுப்பாட்டாளர் திரு தியாகராசா மற்றும் பல பிரமுகர்களும் உயர் அதிகாரிகளும் சமூகமளித்திருந்தனர்

கைதி சிக்கினார்

(நெல்லியடி)

கோப்பாய் திறந்தவெளிச் சிறையிலிருந்து தம்பியோடிய சிறைக்கைதி யொருவர் மீண்டும் சிறைப்பகுதி அதிகாரிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

சிறைச்சாலையின் பின்புற கம்பிவேலியால் தப்பிஓடியதை கடமையில் ஈடுபட்டிருந்த காவலாளி அவதானித்ததால்தான் கைதியை சுலபமாக துரத்திச்சென்று பிடிக்க முடிந்ததாம். (உ)

வீதி புனரமைப்பு

(நெல்லியடி)

நெல்லியடி - விக்கினேஸ்வராக் கல்லூரி வீதி மிக விரைவில் சுமார் 15,000 ரூபா செலவில் வீதி உடனடியாக புனரமைக்கப்படவுள்ளது

பொதுமராமத்து உயர் அதிகாரிகள் இவ் வீதியை அண்மையில் பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள் [உ]

திருட்டு

[நெல்லியடி]

கனுவில் சனசமூகநிலையத்தில், சனசமூகநிலைய தேவைகளின்பொருட்டு வைக்கப்பட்டிருந்த தபால்பெட்டி திருட்டுப்போயுள்ளது.

சில விஷமிகள் இத் திருட்டை திட்டமிட்டுசெய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறதாம். [உ]

வெஸ்லி
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 8-30
சனி, ஞாயிறு 2-30
கண்ணாடி மாளிகை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 3-45, 10-00
சனி, ஞாயிறு 3-45
எம். ஜி. ஆர் - பத்மினி
விக்கிரமாதித்தன்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்.—விஜயகுமாரி
நீங்காத நினைவு

லிடோ போன்: 1601 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
(யாழ்.நகர்) ஆசை அறுபதுநாள்

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(புதியபிரதி) (சலர்)

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

5-வது வெற்றி வாரம்
ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

8-வது வாரம்
வின்ஸர் போன்: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 4 காட்சிகள்
ராணி
(யாழ் நகர்) ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி
நடித்த
ஜெயகாந்தனின்
ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
டைரக்ஷன் ; A. பீம்சிங்

REGAL Daily at, 4-30, 7-00 & 9-30 p. m.
(Jaffna)
SO DARLING SO DEADLY

Shanthi - Jaffna Phone-7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30
MICHAEL YORK AND HIDEMI AOKI
SEVEN NIGHTS IN JAPAN
More Suitable for Adults — Eastman Color
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இனிய இசையும், வர்ண ஒளியில் யப்பானின் எழில் உங்கள் கண்களுக்கு அரிய விருந்தாகும்.

"சிவாஜியுடன் நடிக்கையில் ஏற்பட்ட உணர்வு"

வி. எஸ். ராகவன் பேட்டி

[வெள்ளவத்தை]

"மல்லியம் ராஜகோபால் டைரக்ட் செய்த "சவாலே சமாளி" படத்தில் நடிகர் திலகம் சிவாஜிகணேசனுடன் நடிக்கும்போது வரலாற்றுப் புகழ்படைத்த நடிகருடன் நடிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் அந்தப் பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்தேன்"

இவ்வாறு இலங்கை இந்தியக் கூட்டுத்தயாரிப்பான நங்கூரம்" படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிக்கும் தமிழகப் பிரபல நடிகரான திரு. வி. எஸ். ராகவன் அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது.

இலங்கை நடிகர்களுடன் நடிக்கும்பொழுது அவர்களின் நடிப்பாற்றலை நேரில் பார்க்கும் வாய்ப்பும் அவர்களுடன் இணைந்து நடிக்க கிடைத்ததையும் பெருமகிழ்ச்சிக்குரியதாகக் கருதுகிறேன்"

"நான் நாடக மேடையிலிருந்து திரையுலகிற்கு வந்தவன். ஒரு நடிகனுக்கு நாடக பயிற்சி மிக அவசியம். என்னோடு ஐ என் எஸ் நாடகக் குழுவில் இருந்தவர்கள் தான் பிரபல டைரக்டர் கே. பாலச்சந்தர், நடிகர் நாகேஷ், ஸ்ரீகாந்த போன்றவர்கள்.

நான் இதுவரை இரு நூறுக்கு மேற்பட்ட திரைப் படங்களில் நடித்துவிட்டேன். சவாலேசமாளி, இருகோடுகள், நூற்றுக்கு நூறு, என்னதான் முடிவு போன்ற திரைப் படங்களில் நடித்த பாத்திரங்களே எனக்குமனநிறைவு தந்தது.

'நான் "வைரமாலை" என்ற திரைப்படத்தின் மூலமே திரையுலகிற்கு அறிமுகமானேன். இது நான் நடித்த நாடகம், இதனை திரு. ஸ்ரீபாதசங்கர் தயாரித்த பொழுது நாடகத்தில் நான் நடித்த பாத்திரத்தையே எனக்கு தந்தார்.

நான் நடிகனாக இருந்தாலும் ஒரு பத்திரிகையாளன், எழுத்தாளன் என்பதில் பெருமைப்படுகிறேன். பெரும்பாலோருக்கு இந்தத் தகவல் தெரியாது. நான் 'ஆனந்த விகடனில் சிறுகதைகள் எழுதியுள்ளேன். "மாலதி" என்ற சஞ்சிகையில் எழுத்தாளர் துமிலன் அவர்களுக்கு உதவிஆசிரியராக பணியாற்றியுள்ளேன்.

எனக்கு பிடித்த நடிகர்களில் நண்பர் நாகேஷ் மிகவும் அபூர்வமான நடிகர் குறுகியகாலத்தில் அதிகமான திரைப்படங்களில் நடித்த பெருமை அவரையே சாரும் பாத்திரத்திற்கு பாத்திரம் மாறுபட்ட விதமாய் திறம்பட நடிப்பார்.

இன்று பல இளையதலைமுறை கலைஞர்கள் சினிமா உலகிற்கு வந்திருக்கின்றனர். டைரக்டர் பாரதிராஜா திறமையான டைரக்டர் என்பதை அவரின் முதல் திரைப்படமான '16 வயதினிலே' மூலமே உணர்த்தி விட்டார், கதையம்சத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து படங்களை வெற்றிகரமாக இயக்கியுள்ளார்,

இவரது "சிகப்பு ரோஜாக்கள்" வெற்றிகரமாக தமிழகத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது,

கலைத்துறையில் போட்டி ஏற்படவேண்டும், ஆனால் பெருமை உருவாகிவிடக் கூடாது, இந்திய நடிகர்களுடன் இலங்கை நடிகர்கள் போட்டிபோட்டு நடிக்கவேண்டும், அப்பொழுது அவர்களின் திறமைகள் ஒளிச்சிடும்,

இரு நாட்டுக் கலைஞர்களும் இணைந்து நடிப்பதன் மூலம் ஒருவர் திறமையை ஒருவர் அழித்துவிட முடியாது, (உ)

"நிபந்தனையின்றி மாணவரை அனுமதிக்கவும்"

[யாழ்ப்பாணம்]

"தங்களுக்குப் பாதகமானதெனக்கருதும் செய்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது ஜனநாயகமுறை என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். இதன் அடிப்படையில்தான் கடந்தவாரம் பல்கலைக் கழகப் பிரவேசம் சம்பந்தமாக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்தனர். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எதிராக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் பழிவாங்கும் நோக்கத்துடனேயே செய்யப்படுகின்றன. இதனை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டக்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது."

மேற்கண்டவாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ். பிரதேசக்கிளையின் இணைச் செயலாளர் திரு. சி.விஜயானந்தன் விடுத்துள்ள அறிக்கையில்மேலும் தெரிவித்துள்ளார் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

"பல்கலைக்கழகப் பிரவேசம் சம்பந்தமாக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் தெளிவாக்கப்படவில்லை. உடனடியாகப் பொதுமக்களுக்குத் தெளிவு படுத்தப்பட வேண்டும். அரசாங்கம் மீண்டும் இப்பகுதி மாணவர் நலத்தில் அமைதியை நிலைநாட்ட விரும்பின் இதுவரை மாணவர்கள் ஆசிரியர்கள் மீது எடுத்த பழிவாங்கும் நடவடிக்கைகளை எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக வாபஸ்பெற வேண்டும் அதே நேரத்தில் பல்கலைக்கழக பிரவேசம் சகலபகுதி மக்களும் ஏற்கும் வகையில் நீதியான முறையில் அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்" (அ)

"பொய்யுரைக்கக் கூறும்" பணிப்புரை

[யாழ்ப்பாணம்]

கடந்த 1ம் திகதியிலிருந்து 7ம் திகதிவரை பாடசாலை செல்லாத மாணவர்களை எவ்வித நிபந்தனையுமின்றி அனுமதிக்க வேண்டுமென்றுகோரி கோப்பாய்த் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அதன் நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ் மாணவர்களைப் பாதிக்கும் தரப்படுத்தல் முறையை ஆட்சேபித்து இம் மாதம் 1ம் திகதியிலிருந்து 7ம் திகதிவரை பாடசாலைகளைப் பகிஷ்கரித்த மாணவர்களை வைத்திய அத்தாட்சிப்பத்திரமின்றிப் பாடசாலைகளில் அனுமதிக்க வேண்டாமெனக் கல்வி அமைச்சு வாஞ்சி மூலம் அதிபர்களுக்கு விடுத்த பணிப்புரை நியாயமற்றதாகும் மாணவர்களையும் பெற்றோரையும் வைத்தியர்களையும் பொய்யுரைவழங்கும்படி கேட்பதாக இது அமைகிறது. ஆகவே இப் பொருத்தமற்ற பணிப்புரையை கல்வி அமைச்சர் உடனடியாக வாபஸ் பெற்று எவ்வித நிபந்தனையுமின்றி மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாடசாலைகளில் அனுமதிக்கவேண்டும். தமிழ்த் தலைவர்களும் இவ்விஷயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்." [அ]

காரை. சிவன் வீதிக்கு மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சிவன் கோவில் வீதி மின்சார நிர்மாண வேலைகளை வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் இன்று காலை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இவ்வேலைக்கு முப்பதாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. [உ]

பாரதமும் அங்கீகாரம்

புதுடில்லி, பெப், 13

ஈரானின் தற்காலிக அரசை பாரதமும், ஜப்பானும் அங்கீகரித்துள்ளன

அமெரிக்காவும், ரஷ்யாவும் இவ்வரசை ஏற்கனவே அங்கீகரித்துள்ளது தெரிந்ததே. [உ]

திருட்டு...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

சேர்தவரென்றும், முன்பும் திருட்டுக் குற்றங்களுக்காக சிறையிலிருந்தவர் என்றும் தெரிவித்துள்ளாராம்

இவருடன் இத்திருட்டு முயற்சியில் ஈடுபட்ட மற்றவர்கள் வடமராட்சியைச் சேர்ந்தவரெனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (உ)

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
High Velocity
வியட்நாம் புரட்சிக்கதை

வவனியாவில்

இ. ஆ. சங்க கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

இலங்கை ஆசிரியர்சங்க வவனியா மாவட்டக்கிளை ஒழுங்குசெய்துள்ள கருத்தரங்கொன்று 17ந் திகதி வவனியா காமினிமகாவித்தியாலயத்தில் நடைபெறும்,

இக்கருத்தரங்கில் இலங்கை ஆசிரியர்சங்க பொதுச்செயலாளர் திரு. சித்திராலி த பெரேரா, அரசாங்க சேவைச் சட்டதிட்டங்களும் ஆசிரியரும், என்னும் விடயம்பற்றி விரிவுரையாற்றுவார்.

திறந்த வெளிப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் அனுமதிபெறும் மாணவர்கள் வாரத்தில் 5 மணித்தியாலங்கள் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கவேண்டுமென்றும் அவர் கூறினார். [இ]

வவனியா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வவனியா மாவட்டத்தில் சுமார் 30 ஆசிரியர்கள் குறித்த நாட்களில் சமூகமளிக்கத் தவறியுள்ளதாகம் தெரியவருகிறது. (அ)

"யாழ். நவீன மார்க்கட் கடைகளை

ரெண்டரில் வழங்கும்படி அமைச்சின் செயலாளர் கட்டளையிட்டுள்ளார்"

ஆணையாளர் சிவஞானம் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

ரெண்டர் முறையை ஒழுங்காக நடைமுறைப்படுத்த வேண்டிய கடமையிருப்பதால் நான் ரெண்டர் முறையை இவ்விடயத்தில் கடைப்பிடித்ததாக யாழ். நவீனமார்க்கட் வழக்கில் சாட்சியமளித்த யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் கூறினார்.

இவ்வழக்கு யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

இவ் வழக்கில் யாழ். பண்ணை மார்க்கட்டை சேர்ந்த எம். பி. சின்னராசா என்பவர் யாழ். நவீனமார்க்கட் 2ம் கட்டத்திலுள்ள கடைகளை டெண்டரில் வழங்கக் கூடாதென ஆணையாளருக்கு இடைக்கால தடைஉத்தரவு வழங்குமாறு தமது மனுவில் கோரியிருந்தார்.

வர்த்தகர் சார்பில் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம், சட்டத்தரணி எச். எம். சஹிட், சட்டத்தரணி எஸ். சி மகாதேவா ஆகியோர் ஆஜராஞர்கள்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் சார்பில் சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளை, சட்டத்தரணி செல்வி விஜசன்ட், சட்டத்தரணி த. பூபாலன் ஆகியோர் ஆஜராஞர்கள்

விசாரணையை பார்ப்பதற்கு வர்த்தகர்கள் வந்திருந்தனர்.

ஆணையாளர் கே. சிவஞானம் மேலும் கூறியதாவது உள்ளூர் அமைச்சு செயலாளர் 44 கடைகளையும் ரெண்டர் முறையாக வழங்கும்படி கட்டளையிட்டிருக்கிறார். ஆனபடியால் அவருடைய கட்டளையை அரச ஊழியன் என்ற கோதாவில் நடைமுறைப்படுத்தினேன்.

நேற்று முன்தினம் சாட்சியமளித்த வர்த்தகரான சின்னராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது நான் முன்பு நவீனமார்கட் கட்டப்பட்ட இடத்தில் தகரக்கொட்டகை போட்டிருந்தேன். பின்பண்ணை மார்க்கட்டிலுள்ள 7ம் இலக்க கடைக்கும் போகச் சொல்லி பணம்கட்டினேன். ஆனால் அங்கு வியாபாரம் நடைபெறவில்லை. அதிகமான நாட்கள் கடைகளை பூட்டி வைத்து விட்டு வாடகை கொடுத்து வந்தேன்,

நவீனமார்க்கட் 2-ம் கட்ட பகுதியில் எனக்கு கடைதருவதாக வாக்குறுதியளித்திருந்தனர். பண்ணை கடைக்கு ஒப்பந்தம் எழுத சொன்னார்கள் நான் எழுதவில்லை.

சட்டத்தரணி கனகநாயகம், வாதாடிய போது கூறியதாவது: ஆணையாளர் ஒரு அரச ஊழியர் இல்லை. அவருக்கு அரசு அலவன்ஸ் தான் வழங்கப்படுகிறது அவர் ஒரு அரச ஊழியரல்ல கோர்ட்டில் தொழில் பார்க்கிறார். முன்னாள் ஆணையாளராக திரு. நடராசா இருந்த போது சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் பணியாற்றினார்.

நீதி: யார் மாநகரசபை நிர்வாகம் நடத்துவது?

எஸ். ஆர்: ஆணையாளர்.

நீதி: சபை தற்போது இல்லையே.

கதிரவேலுப்பிள்ளை: அமைச்சின் பணிப்பின்படி, அமைச்சரின் கட்டளைப்படி, ஆணையாளர் நடக்கிறார்.

எஸ். ஆர்: அதுசரியல்ல.

கதிரவேலுப்பிள்ளை: அமைச்சருக்காக, அமைச்சு பணிக்கிறது.

எஸ். ஆர்: மேயராக துரையப்பா இருந்த போது சார்சார்ஜ் அறவிடப்படவில்லை. சுகிதான் மீது சார்சார்ஜ் சுமத்தப்பட்டபோது கமிஷன் அதை நீக்கியது ஆணையாளர் ஒரு அரசு ஊழியரல்ல.

இன்று காலை 10 மணிக்கு வழக்கு தொடர்ந்து நடக்கும்.

மன்னர் ஷாவின் சகாக்கள் மீது விசாரணை நடத்தப்படும்

புதிய அரசு அறிவிப்பு

தெஹ்ரான், பெப். 13

ஈரானில் மன்னர் ஷாவின் முக்கிய சகாக்களின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று ஈரானிய தற்காலிக அரசு அறிவித்துள்ளது. மன்னர் ஷாவின் நிர்வாகத்தில் இருந்த பிரதம மந்திரி (பக்தியார் அல்ல) ஒருவர் உட்பட பலர் மீது விசாரணை நடத்தப்படும்.

இவர்மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்படும். என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று பல பொலிஸ் அதிகாரிகளும் முன்னாள் அமைச்சர்களும்வீதிகளில் பகிரங்கமாக கூடிச்செல்லப்பட்டனர். [உ]

4 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த

இளவாலை அன்னம்மாள் ஆலயம் திறக்கப்பட்டது

[பண்டத்தரிப்பு]

1974-ம் ஆண்டு ஆடி மாதத்தில் சாதிப்பிரச்னையினால் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்களை அடுத்துப் பூசைகள் எதுவும் இல்லாமல் பூட்டப்பட்ட நிலையில் இருந்த இளவாலை அரிச் அன்னம்மாள் தேவாலயம் கடந்தவாரம் தொடக்கம் மீண்டும் திறக்கப்பட்டு வழமையான பூசைகள் நடைபெற்று வருகின்றன.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வண. அன்ரன் இராசநாயகம் அடிகளார் தலைமையில் இப்பகுதியிலுள்ள இளைஞர்கள் மேற்கொண்ட சமரச முயற்சிகளை அடுத்து இந்த ஆலயம் மீண்டும் திறக்கப்பட்டு பூசைகள் நடைபெற்று வருகின்றன.

"உயர்கல்வித்தராதரத்துடன்

வெளிநாடுகளில் வேலைபெற சந்தர்ப்பம் தாருங்கள்"

பண்டத்தரிப்பில் வட்டு எம். பி.

(பண்டத்தரிப்பு)

இந்நாட்டில் தமிழினத்திற்கு அரசாங்க வேலை வாய்ப்புகள் தான் கிடைக்க முடியாதுவிட்டாலும் உயர் கல்வி பயிலும் சந்தர்ப்பத்தையாவது தாருங்கள் என்றுதான் நாங்கள் அரசாங்கத்தைக் கேட்கின்றோம். எமது தமிழ் இளைஞர்களுக்கு இந்நாட்டில் தான் அரசாங்க உத்தியோகங்கள் கிடைக்காதுவிட்டாலும் உயர்கல்வித் தராதரத்துடன் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்று இந்நாட்டிற்கு போதியளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருவார்கள். இந்த நியாயமான உரிமையைக்கூட புதிய பல்கலைக்கழகதரப்படுத்தல்திட்டம் தடைசெய்கிறது இந்நிலையில் இதற்கு எமது எதிர்ப்பையும், ஆட்சேபத்தையும் தெரிவிக்கவேண்டியது தமிழினத்தின் கடமையாகும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை எம் பி திரு தா. திருநாவுக்கரசு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வைபவத்தில் கூறினார். தொழில் பயிற்சிபெற்ற மாணவிகளுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கும் வைபவத்திலும், பொருட்காட்சியிலும் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. திருநாவுக்கரசு தொடர்ந்து உரையாற்றுகையில் "தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் தங்கள் எதிர்காலத்தை வளம்படுத்து முகமாக போதிய தொழில் பயிற்சி பெறவேண்டும். அரசாங்கம் இந்நாடின் இதர பகுதிகளில் 18 முழுநேர தொழிற் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவியுள்ளது. ஆனால் யாழ். குடாநாட்டில் இவைகளில் ஒன்றுகூட நிறுவப்படவில்லை. வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஒரு தொழிற்பயிற்சிக் கல்லூரியை நிறுவித்தருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கைவிட தீர்மானித்துள்ளேன் என்றார்.

யாழ்மாவட்ட தொழில் முன்னிலைப்பாட கல்வியதிகாரி திரு. வி. இராமநாதன் உரையாற்றுகையில் "யாழ்மாவட்டத்தில் 30 கல்லூரிகளில் பாடசாலையிலிருந்து விலகிய மாணவருக்கான தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் பயிற்சி பெற்றவர்களில் பலர் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுச் சென்றிருக்கின்றனர். என்று கூறினார் மனையியல் வித்தியாதரசினி திருமதி சுந்தரராஜா, கைத்தொழில் வித்தியாதரிசி திரு. லஸ் பாலசுத்தரம் உட்பட பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினார்கள் தொழில் பயிற்சிபெற்ற மாணவிகளுக்கான சான்றிதழ்களை யாழ்மாவட்ட தொழில் முன்னிலைப்பாட கல்வி அதிகாரி வி இராமநாதன் வழங்கினார்.

இ. தொ. க. மாநாடு:

கவிஞர் கண்ணதாசனும் கலந்துகொள்கிறார்

(வெள்ளவத்தை)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மார்ச் மாதம் பதுளையில் நடத்தவிருக்கும் மாநாட்டிற்கு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனா விஷேட அழைப்பாளராக கலந்து கொள்ள விருக்கிறார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 9-10-11-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டிற்கு தென்னிந்திய திரைப்பட நட்சத்திரங்களுடன் கவிஞர் கண்ணதாசன் கௌரவ விருந்தினராக கலந்து கொள்வர்.

மேற்படி மாநாட்டில் இலங்கைத் தமிழ் சினிமா திரைப்பட நட்சத்திரங்கள், காமினி பொன்சேகா, மாலினிபொன்சேகா, டீன்குமார் உட்பட பலர் கலந்து கொள்வார்கள்

இ. தொ. கா. உபதலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற அமரர் திரு. வீரசேவுகப் பெருமாளை கௌரவிக்குமுகமாக 'வீர சேவுக பெருமாள் நகர்' என்ற பெயரில் மாநாட்டை நடத்துவதென்றும் தோட்டத் தொழிலாளர்களின் பாரம்பரிய கலை கலாசாரங்களைப் பிரதிபலிக்கக்கூடிய முறையில் பல கலை நிகழ்ச்சிகளை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து தொழிற்சங்கப் பிரமுகர்களை கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பிப்பார்கள். [உ]

யாழ். நவீன மார்க்கட்

44 கடைகளுக்கு 256 பேர் விண்ணப்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நவீனமார்க்கட் 2-ம் கட்டத்திலுள்ள 44 கடைகளுக்கு 256 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இக்கடைகள் யாவும் ரெண்டர் மூலம் வழங்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இன்று பிற்பகல் 2 மணிக்கு ரெண்டர் திறக்கப்படும் என்றும், அப்போது விண்ணப்பதாரர்கள் சமுகமளிக்கலாம் என்றும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த மாதம் ஸ்ரான்லி வீதியில் உள்ள 4 கடைகள் ரெண்டர் மூலம் வழங்கப்பட்டது. [உ]

கல்லூரிகளைத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

என்றோ, வகுப்புக்களை நடத்தக்கூடாது என்றோ தெரிவிக்கப்படவில்லை ஆதலால் இதற்கமைவாக எல்லாப் பாடசாலைகளையும் வழமைபோல் திறந்து, வகுப்புகளில் போதனைகளை நடத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் அச்சுற்றுநிருபத்தில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்குக் கொடுக்குமாறு அதிபர்களைக் கேட்டபதென்றும் நடவடிக்கைக்குழு தீர்மானித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

அதிபர்கள் சங்கத்தின் கோரிக்கைக்கு இலங்கை ஆசிரியர் சங்க யாழ்ப்பாணக்காவட்டக்கிளை ஆதரவு தெரிவிப்பதுடன் இன்று மாணவர்களை அனுமதித்து பாடசாலையை பாடபோதனை மேற்கொள்ளுமாறு தனது அங்கத்தவர்களை மேற்படி சங்கம் கோரியுள்ளது [கொக்-இ]

வியாழன்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மான ஒரு முடிவைக் காணாது வியாழக்கிழமையும் அரசன் நிலைமை இன்றிருப்பதுபோலவே இருக்குமேயானால் மாணவர்களையும், ஆசிரியர்களையும் மாத்திரம் பிரச்னையில் ஈடுபடவிட்டு நாம் பார்த்திருக்க மாட்டோம் பெற்றோரையும் ஈடுபடுத்தி நாம் போராட்டத்தில் இறங்குவோம். பல்கலைக்கழக அனுமதியில் நீதி கேட்ட எமக்கு உலக அரங்கில் நேர்ந்ததை உணர்த்துவோம்." [ம]

காங்கிரஸ் வழக்கு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழ் காங்கிரஸ் வழக்கு இம்மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைப்பட்டுள்ளது.

இவ்வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஆசிர்வாதம் முன்னிலையில் கூப்பிடப்பட்டு பின்போடப்பட்டது

மனுதார் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ் கதிரவேலுப்பிள்ளை அன்றைய தினம் தொகுப்புரை நிகழ்த்துவர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட்ட ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 889, Registered as a News paper in Sri Lanka.-